सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

<u>யாழ்ப்பாணம்</u>

## <u>செய்திக்குறிப்பு</u>

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்துணைத் தூதரக வளாகத்தில் இந்தியாவின் 67ஆவது சுதந்திர தின வைபம் இன்று கொண்டாடப்பட்டது. திரு. வெ.மகாலிங்கம் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து தூதரக அலுவலர்களாலும், இந்திய சமூகத்தவர்களாலும் தேசியகீதம் பாடப்பட்டது. சுதந்திர தின மாலை வேளையில் இந்திய ஜனாதிபதியால் மக்களுக்கு ஆற்றப்படும் உரையை துணைத்தூதர் அவர்கள் வாசித்தார்.

வைபவத்தின் போது வட மாகாண புகையிரத மீளமைப்பு பணிகளுக்காக யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தங்கியுள்ள இந்திய புகையிரத கட்டமைப்பு நிறுவன (IRCON) அதிகாரிகள், மற்றும் இந்தியன் வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய இந்தியப் பிரஜைகள் கலந்துகொண்டனர்.

**15 ஓகஸ்ட், 2013**